

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நேற்று (09.12.2023) மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட சைதாப்பேட்டை தொகுதிக்குட்பட்ட கோதா மேடு பகுதியைச் சேர்ந்த 3000 மக்களுக்கும், சாமியார் தோட்டம் பகுதியைச் சேர்ந்த 2000 மக்களுக்கும் அரிசி, போர்வைகள் போன்ற அத்தியாவசிய நிவாரண பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ் குமார், மண்டல குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி நேற்று (9.12.2023), இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம், ஜாபர் ஜெராங் தெருவில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் 5வது மண்டலத்துக்குட்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த கிளைவ் பேக்டரி பகுதி பொதுமக்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் உதவித்தொகைளை வழங்கினர். இந்நிகழ்வின் போது இராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு ஆகியோர் உடனிருந்தனர்.

### மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தி.மு.க. சார்பில் நிவாரணப் பொருட்கள்

# புயலால் சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் 1.20 கோடி பேர் பாதிப்பு!

## மிக்ஜாம் புயலை தேசிய பேரிடராக அறிவிக்க பிரதமரிடம் டி.ஆர்.பாலு வலியுறுத்தல்!

சென்னை, டிச. 10-

மிக்ஜாம் புயல் மழை பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்து தமிழ்நாட்டிற்கு நிதி வழங்க வேண்டும் என்று பிரதமரிடம் வலியுறுத்தி உள்ளதாக நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தொகுதிக்குட்பட்ட கன்னடபாளையம், அன்னை அஞ்சுகம் நகர், சமத்துவ பெரியார் நகர், காந்திநகர் உள்ளிட்ட பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திமுக சார்பில் நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரிசி, பருப்பு, சர்க்கரை, பாய், போர்வை, காய்கறி உள்ளிட்ட பொருட்களை, நாடாளுமன்ற திமுக குழுத்தலைவர் டி.ஆர்.பாலு வழங்கினார். சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, மாநகர மேயர் வசந்த குமாரி மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர். இந்த நிகழ்ச்சிக்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய டி.ஆர்.பாலு, மிக்ஜாம் புயல் பாதிப்பை தேசிய பேரிடராக அறிவிக்கவேண்டும் என, திமுக சார்பில் பிரதமர் மோடியிடம் வலியுறுத்தப் பட்டதாக கூறினார். மிக்ஜாம் புயல் காரணமாக, சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் ஒரு கோடியே 20 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் டி.ஆர்.பாலு தெரிவித்தார். புயல் மழை பாதிப்பை தேசிய பேரிடராக அறிவித்தால்தான் கூடுதல் நிதி கிடைக்கும் என்றும் அவர் கூறினார்.

### துறைமுகம் தொகுதியில்

# கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 8,700 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு பேட்டி!

சென்னை, டிச.10-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி, மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் நேற்று (09.12.2023) இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு 8,700 குடும்பங்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் தமிழக அரசும், மாநகராட்சி நிர்வாகமும் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டு மழைநீர் வெளியேற்றுதல், உணவு மற்றும் நிவாரண உதவிகள் வழங்குதல், நோய் தொற்று பரவாமல் தடுக்க மருத்துவ முகாம்கள் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

அந்த வகையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (09.12.2023) சென்னை, இராஜா அண்ணாமலை மன்றத்தில் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இராயபுரம் மண்டலம், 54 மற்றும் 59வது வார்டுகளை சேர்ந்த, டி.என்பி.எஸ்.சி சாலை, நாராயணப்பா சாலை, என்.சி.போஸ் சாலை, தேவராஜ் முதலியார் தெரு, மெமோரியல் ஹால் சாலை ஆகிய பகுதிகளில் வசிக்கும் 4,900 குடும்பங்களுக்கும், பிராட்வே, ஜாபர் ஜெராங் தெருவில் 60வது வார்டை சேர்ந்த 1,500 குடும்பங்களுக்கும், டான்பாஸ்கோ மேல்நிலைப் பள்ளியில் 56வது வார்டை சேர்ந்த 2,300 குடும்பங்களுக்கும் ஆக மொத்தம் 8,700 குடும்பங்களுக்கு அரிசி, பால், போர்வை, பிரட், பிஸ்கட்கள், குடிநீர் போன்ற நிவாரண உதவிகளை வழங்கினார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

அ.தி.மு.க. ஆட்சியில் 2015 ஆம் ஆண்டு தொடங்கி 2021 ஆம் ஆண்டு வரை நகராட்சி நிர்வாகத் துறை மானிய கோரிக்கைகளில் 6500 கோடி ரூபாய் மழைநீர் கட்டமைப்புகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இது சட்டமன்ற குறிப்புகளில் இருக்கின்றது.

2021 ஆம் ஆண்டு இன்னைக்கு வெள்ளை அறிக்கை கேட்கின்ற கருப்பு உள்ளம் கொண்ட அந்த மனிதர், 2021 ஆம் ஆண்டு தேர்தல் பிரச்சாரத்தின் போது நாங்கள் போதிய கட்டமைப்புகளை அமைத்து விட்டோம், சிங்கப்பூர் போன்று எவ்வளவு பெருமழை வந்தாலும் ஒரு சொட்டு தண்ணீர் கூட நிற்காது என்று கூறினார்.

அவர் ஆட்சி முடிவுற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 2021 ஆம் ஆண்டு ஏற்பட்ட பெருமழை வெள்ளத்தின் போது இன்றைய மழையின் அளவில் 50 சதவீத மழையே பெய்த போது சென்னையே தத்தளித்து கொண்டிருந்ததை நீங்கள் யாரும் மறந்திருக்க மாட்டீர்கள். ரூ.4000 கோடிக்கு எங்கெல்லாம் பணிகள் நடைபெற்றிருக்கிறது என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, துறையின் அமைச்சர் அவர்கள் தெளிவாக எடுத்து கூறி இருக்கின்றார்.

நாங்கள் திரும்ப கேட்கிறோம். நீங்கள் ரூ.6,000 கோடியை செலவு செய்வதற்கு வெள்ளை அறிக்கை விலாவாரியாக வெளியிட தயாரா என்பதுதான். குற்றம் பார்ப்பின் சுற்றம் இருக்காது என்பார்கள். இப்போது மக்களை பாதிப்பிலிருந்து மீட்பதற்கு அனைத்து கரங்களும் ஒன்றிணைந்து களத்தில் நிற்க வேண்டுமே தவிர, தொடர்ந்து அவதூறு பேசுவதை தவிர்த்து, மக்கள் பணியில் ஈடுபடுபவர்களை உற்சாகப்படுத்துவதற்கும், பணிகளை துரிதமாக நிறைவேற்றுவதற்கும் ஒத்துழைப்பு தருவது தான் எதிர்க்கட்சித் தலைவரின் முடிவாக இருக்க வேண்டும்.

கனமழையில் ஒரு சில தாழ்வான பகுதிகளில் தேங்கிய நீருக்கு தேவையான கட்டமைப்புகளை அமைக்க தற்போது திட்டமிட்டு இருக்கின்றோம். அடுத்து வருகின்ற மழைக் காலங்களில் அந்தப் பகுதியிலும் தண்ணீர் தேங்காத அளவிற்கும், இயல்பு வாழ்க்கை பாதிக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அதோடு மட்டுமல்லாமல் சமீபத்தில் பெய்த மழை 2015-ஆம் ஆண்டு பெய்த மழையை விட அதிகமானது. மழையால் ஏரிகள் மற்றும் கால்வாய்கள் அனைத்தும் நிரம்பிவந்ததை நீங்களே கண்டீர்கள். மழை விட்டாலும் கால்வாய்களிலிருந்து செல்லும் தண்ணீர் முகத்துவாரங்களில் பெரிய அளவு உள்வாங்கவில்லை.

அதனால் தான் இரண்டு நாட்கள் தாழ்வான பகுதிகளில் தண்ணீர் தேங்கி இருந்த நிலை இருந்தது. இப்போது 95 சதவீத பகுதிகளில் இயல்பு நிலை திரும்பியிருக்கின்றது. எந்தந்த மாவட்டங்களில் புயல் மழையால் பாதிப்பு இல்லையோ அந்த மாவட்டங்களிலிருந்து பணியாளர்களை அழைத்து வந்து தேங்கிய தண்ணீரை அகற்றுவதற்கு சூப்பர் சக்சன் மெஷின்களை கொண்டு வந்து துரிதப்பணியை மேற்கொண்டுள்ளோம். சென்னையில் மட்டும் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வெளி மாவட்ட பணியாளர்கள் தூய்மை பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

மாநகர் முழுவதும் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குப்பைகளினால் நோய்த் தொற்று வந்து விடக்கூடாது என்பதற்காக குப்பைகளை அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் நடந்து கொண்டிருக்கின்றது.

எந்த ஆட்சியிலும் இல்லாத அளவிற்கு 34 சென்டிமீட்டருக்கு அதிகமாக, 47 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த பெருமழை பெய்துள்ளது. இருப்பினும் இரண்டு நாட்களில் மாநகரம் இயல்பு நிலைக்கு திரும்பி இருக்கிறது என்றால் அது முதலமைச்சர் அவர்கள் கண் துஞ்சாமல் ஆற்றிய உழைப்பின் காரணமாக தான். இன்னும் ஒரிரு நாளில் மக்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் முழுமையாக இயல்பு நிலை திரும்பும் என்று தெரிவித்தார்.

முன்னதாக, சென்னை மாநகராட்சி, திரு.வி.க. நகர் மண்டலத்துக்குட்பட்ட பெரம்பூர் பேரக்ஸ் சாலை, லட்சுமி மஹாலில் நேற்று (09.12.2023) உயர்கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, பால், பிஸ்கட்கள், பிரட், போர்வை, குடிநீர் உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை வழங்கினர்.

இந்நிகழ்ச்சிகளில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், தாயகம் கவி, கண்காணிப்பு அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்கக இயக்குநர் ப.கணேசன், இராயபுரம் மண்டலக் குழுத் தலைவர் ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் ஏ.எஸ் முருகன், மாநகராட்சி உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இரயில்களில்

# பார்சல்களை உடனடியாக அனுப்ப நடவடிக்கை தேவை!

## மாநிலங்களவையில் எம்.எம்.அப்துல்லா கவனஈர்ப்புத் தீர்மானம்!



புதுடெல்லி, டிச. 10-

இரயிலின் வழித்தடத்தின் இடையில் உள்ள இரயில் நிலையங்களில் இணையத்திலோ, நேரிலோ முன்பதிவு செய்யப்படும் பார்சல்களை பதிவு செய்யப்பட்ட தேதியின் அடிப்படையில் அவற்றைக் கண்காணிக்கவும், உடனடியாக அனுப்பவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா மாநிலங்களவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

இதுகுறித்து அவர் பேசியதாவது:-

அதில் "80%க்கும் அதிகமான பயணிகளுடன் ஆன்லைனில் முன்பதிவு செய்யப்படும் உலகின் நான்காவது பெரிய ரயில்வேயான இந்தியன் இரயில்வே தற்போது சரக்கு சேவைகளில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகிறது. அதாவது இரயிலின் வழித்தடத்தில் இடையில் உள்ள இரயில் நிலையங்களில் பார்சல் சேவைகள் சரிவர கிடைப்பதில்லை.

ஒவ்வொரு இரயிலிலும் உள்ள பார்சல் பெட்டி பெரும்பாலும் இரயில் புறப்படும் முதல் நிலையத்திலேயே நிரப்பப்படுகிறது. இந்த வகையான முன்னுரிமை மூலம் இடையில் உள்ள நிலையங்களில் இருந்து வரும் பயணிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். ஆன்லைனிலோ, நேரிலோ அவர்களால் முன்பதிவு செய்யப்பட்ட பார்சல்கள் பதிவு செய்யப்பட்ட இரயில் நிலையத்திலேயே வாரக்கணக்கில் அல்லது மாதக்கணக்கில் காத்திருக்கும் நிலை ஏற்படுகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு நபர் சில அவசியத்தின் காரணமாக வேறு இடத்திற்குச் செல்ல வேண்டிய நிலையில் அவர் தனது பைக்கை இரயில்வே பார்சல் சர்வீஸ் மூலம் அனுப்பும்போது அது அந்த வழித்தடத்தில் இடையில் உள்ள இரயில் நிலையமாக இருப்பின் ஒரு வாரம் அல்லது ஒரு மாதத்திற்கும் மேல் முன்பதிவு செய்யப்பட்ட அந்த இரயில் நிலையத்திலேயே காத்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. இந்நிலையில் அது நிச்சயம் சேதமடைய வாய்ப்புள்ளது. எனவே பயணிகள் மிகுந்த பொருள் இழப்புக்கு ஆளாக வேண்டியுள்ளது.

இந்தியாவில் உள்ள பல பயணிகளுக்கு மலிவு விலை போக்குவரத்தான இரயில்வே இன்னமும் ஒரு விருப்பமான போக்குவரத்தாக உள்ளது. எனவே இரயில் வழித்தடத்தின் இடையில் உள்ள இரயில் நிலையங்களில் பார்சல்கள் அதிக நேரம் காத்திருக்காமல் இருக்க முன்பதிவு தேதியின் அடிப்படையில் பார்சல்களை கண்காணிக்கவும், அனுப்பவும் சாத்தியமான வழிகளில் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்திய ஒன்றிய இரயில்வே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

இவ்வாறு எம்.எம்.அப்துல்லா பேசினார்.

### இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில்

# எழும்பூர் தொகுதியில் நிவாரண உதவிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - தயாநிதிமாறன் எம்.பி. வழங்கினர்!

சென்னை, டிச.10-

எழும்பூர் தொகுதி 1,500 பெட்ஷீட், 1,500 புடவை, 1,500 கைலி, 1,500 பிரெட் பாக்கெட், 5 கிலோ கொண்ட 1,500 அரிசிப் பை உள்ளிட்ட நிவாரண உதவிகள் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாட்டில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் வழங்கினார்கள்!

மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் நேரில் சென்று மீட்புநிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என முதலமைச்சர் அறிவுறுத்தியதைத் தொடர்ந்து, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும் தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் கடந்த ஆறு நாட்களாக அத்தொகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று, பொதுமக்களின் தேவைகளைக் கேட்டறிந்து, மீட்புநிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட வார்டு எண்.61 இல் உள்ள அய்யாசாமி குடிசைப் பகுதி, வரதராஜபுரம், நரியங்காடு, லாங்க்ஸ் கார்டன் ரோடு மற்றும் ஆங்கிலோ இந்தியன் குவார்ட்டர்ஸ் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு, இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஏற்பாட்டில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோர் 1,500 பெட்ஷீட், 1,500 புடவை, 1,500 கைலி, 1,500 பிரெட் பாக்கெட் மற்றும் தலா 5 கிலோ கொண்ட 1,500 அரிசிப் பை ஆகிய நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்வில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் .விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி, 58வது வட்ட அவைத் தலைவர் வெ.மருதன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், 77 (அ) வட்டத் துணைச் செயலாளர் ஆரோக்கியம், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் ஜே.சிலம்பரசன், 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 58 (அ) வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன், பகுதிப் பிரதிநிதி இளஞ்செழியன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜய போஸ், எழும்பூர் ரமேஷ், கி.புஷ்பராஜ், பிரம்மதேவன், கவிதா, சத்யகலா, பாலாஜி அன்பு மணி, கோமகன், மா.கார்த்திகேயன், அசினா பேகம், ஜெயகுமார், அமரசேகர், பிரபாகரன், தனபிரபா, கௌரிசங்கர், கணேசன், செங்குட்டுவன், விஜய் தேவராஜ், சதீஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், முன்னோடிகளும் கலந்து கொண்டனர்.



மாநில தொ.மு.ச பேரவை முன்னாள் தலைவரும், திண்டுக்கல் நகர முன்னாள் செயலாளரும் ,திண்டுக்கல் நகர் மன்ற முன்னாள் தலைவருமான பசீர் அகமதுவின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி மாவட்ட தொ.மு.ச அலுவலகத்தில் நடைபெற்றது .நிகழ்ச்சிக்கு தொ.மு.ச பேரவை கவுன்சில் பொதுச் செயலாளர் அழகர்சாமி தலைமை வகித்தார். மாநகர செயலாளர் துணை மேயர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ் ஆகியோர் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தினர்.

### அயலக தி.மு.க. - குவைத் தளபதி பேரவை சார்பில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா!

## மருத்துவர் சாந்தமூர்த்தி தலைமை - பட்டுக்கோட்டை சரவணன் ஒருங்கிணைப்பில் நடைபெற்றது!

குவைத், டிச. 10-

அயலக திராவிட முன்னேற்றக் கழகம் குவைத் தளபதி பேரவை சார்பாக, கழக இளைஞரணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா குவைத் பாலிவுட் உணவகத்தில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் அவைத்தலைவர் மருத்துவர் சாந்தமூர்த்தி தலைமையில், தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை சரவணன் ஒருங்கிணைப்பில், கௌரவத் தலைவர் ஜெயபாலன், செயலாளர் அம்மையப்பன் செல்வம், பொருளாளர் காளிதாசன், முதன்மைச் செயலாளர் மண்டலம் மதிவாணன், அமைப்பாளர் போத்தியப்பன், அமைப்புச் செயலாளர் பழனி நல்லரசு முன்னிலையில் கலை இலக்கிய அணி செயலாளர் அருவிக்கவி ஆனந்த ரவி, நெல்லை பேட்டை பிலால், பொறியாளர் அணிச் செயலாளர், தஞ்சை காதர் இளைஞர் அணி செயலாளர், பொறியாளர் சேகர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

மேலும் இதில் கூட்டணி கட்சியான வி.சி.க. கா.மீ.அன்பரசன், த.மு.மு.க. கம்ருதீன், பஜ்ருல்லா, காங்கிரஸ் கட்சி சையது அலிகான். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மன்னை ராஜேந்திரன், ம.தி.மு.க. ஆறுமுகம், ம.ஜ.க. நபீஸ், மற்றும் குவைத் தளபதி பேரவை நிர்வாகிகள், உடன்பிறப்புகள், கலந்து கொண்டு துணைத் தலைவர் குடந்தை ரபிக், துணைச்செயலாளர் மயிலாடுதுறை ராஜா,மருத்துவ அணி செயலாளர் திருத்துறைப் பூண்டி சிவக்குமார், ஹக்கீம் முத்து காமாட்சி, இளங்கோவன், ஸ்டாலின், சரவணராஜ், ரெகுநாத், ரபிக், மதுக்கூர் பிரேம், சர்தார்கான், காசி ராமலிங்கம், ஆறாம் பண்ணைசேக், சாமி மல்லேஸ்வரன், தஞ்சை அலி வலங்கைமான் பாஸ்கரன், சுரேஷ்பாபு, மன்னை விஜய், மூவாநல்லூர் அன்பழகன், அறந்தாங்கி சரவணன், மற்றும்

வலங்கைமான் விஜய குமார், மதுக்கூர் காஜாமுகைதீன் , காரைபாண்டியன், முருகேசன், அப்துல் ரகுமான், ஜீல்பிகார் அலி இராசரத்தினம் ரமேஷ் குமார், சதீஷ்குமார், ஆரோக்கியசாமி, பிரகாஷ் மைக்கேல் டோனி, விஸ்வநாதன், சாகுல்ஹமீது, விவே கானந்தன், முருகையன், பாலையூர் தமீம்முன் அன்சாரி, செந்தில்குமார், வீரமணி, பைரோஸ்கான், கிருஷ்ண மூர்த்தி, அய்யாசரவணன், பெருமாள், சாதிக் ஆறுமுகம், அலி, முகமதுயூசுப், பெரம்பலூர் ராஜா, அருண் குமார், வெற்றிவேந்தன், சக்திவேல், கிருஷ்ண மூர்த்தி, பீர்முகமது, பாட்ஷா,

பாண்டி தென்கொண்டார், கவிஞர்யாகூப்அலி, சமூக அலுவலர் ஸ்டீபன், தமிழ்மக்கள் சேவைமைய நிர்வாகி அலிபாய், தமிழ் ஓட்டுநர் சேவை மையம் நிர்வாகி சையது ஜாபர், உதயநிதி ரசிகர் மன்ற நிர்வாகி ஈரோடு முஸ்தபா, தமிழர்கள் ஓட்டுநர்சேவைமைய நிர்வாகி அலி ரிஸ்வான் , சமூக ஆர்வலர் திருவாரூர் மஜீத் மற்றும் செயற்குழு பொதுக்குழு நிர்வாக குழு உறுப்பினர்கள், தமிழ் அமைப்பைச் சார்ந்த நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள், கலந்து கொண்டு பிறந்தநாள் விழாவை சிறப்பித்தனர்.

குவைத் தளபதி பேரவையின் நிர்வாகிகளாக, தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவருக்கும் சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது, கழக உடன்பிறப்புகள் திரளாக கலந்து கொண்டு கழக இளைஞரணி செயலாளரின் பிறந்தநாளில் அலை போல் வந்து, உதயநிதி வாழ்க, வாழ்க, வாழ்க, என ஆர்ப்பரித்த கழக தொண்டர்கள், மற்றும் வருகை தந்த அனைவருக்கும், பிறந்தநாள் கேக் வெட்டி இனிப்புகள் வழங்கி கொண்டாடப்பட்டது.

தலைமை நிலைய செயலாளர், உ.கு.சிவக்குமார் நன்றி உரையுடன், விழா இனிதே நிறைவு பெற்றது.

### மதுரவாயல் வடக்குப் பகுதி - 92வது வட்டத்தில்

# மழையால் பாதிக்கப்பட்டோர்க்கு மருத்துவ முகாம்!

## வட்டச் செயலாளர் எம்.எம்.ஜெயரத்தினம் தலைமை! எம்.சி.அழகிரி ஏற்பாடு!

சென்னை, டிச. 10-

மதுரவாயல் வடக்கு - 92 வது வட்டக் கழகச் செயலாளர் எம் எம் ஜெயரத்தினம் தலைமையில் மாவட்ட மருத்துவ அணியின் துணைத் தலைவர் எம்.சி.அழகிரி ஏற்பாட்டில் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.குமரேசன், பகுதி துணைச் செயலாளர் எம்.ஏ. செந்தில் சுரேஷ் மாவட்டப் பிரதிநிதி எம்.சி. எழிலரசு ஆகியோர் முன்னிலையில் மாநகராட்சி சுகாதாரம் மற்றும் மருத்துவர்கள் மூலம் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு முதலுதவி சிகிச்சை முகாம் முகப்பேர் கிழக்கு எம்.ஜி.ஆர் ஆதர்ஷ் பள்ளி அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் ஏ.ஜி. வேலன், ஏ. சுந்தரி, எம்.எஸ். பிரபா, டி.கலைநேசன்,எம். பி.நவராஜ், எம்.என்.ராஜ்கமல், எம்.எஸ்.சந்தானம், எம். பி.நவக்குமார், எம்.எஸ்.தமிழ் அழகன், எம்.பி.சீனிவாசன், எஸ்.ஜமுனா, எஸ்.ராகுல், டி. ஜெயச்சந்திரன், எம்.ஜி. சுரேஷ்,எஸ்.பாலாஜி, எ.லீலவாதி, டி.புகழேந்தி, எம்.எஸ். ஜெயசிம்மன், பி.நாகராஜ், கே.முருகன், கே.பிரகாஷ், எம் எம் கண்ணப்பன், ஜி.நாகராஜ், எம் சி.விமல்தாஸ், வி.ஆர்.மகேந்திரன், எம் .ஜி.எம்.புகழேந்தி, சி. காமராஜ், டி.அமுல்ராஜ் எல். கிருஷ்ணமூர்த்தி, கே.பிரகாஷ், எம்.சபரிதாஸ், என்.மல்லியப்பன், எஸ் ஆனந்தன், எம் .பி. நவசுந்தர், வளர்மதி டி.நிக்சன், டி.ஆல்பர்ட், எம்.எஸ். லட்சுமணன், ஜேம்ஸ் .எம். டி.ராஜி இளைஞர் அணி சேர்ந்த எம்.கே.நரேஷ், எம். எஸ் . கார்த்திக், எம்.ஜி.விக்னேஷ், எம்.எம்.ஜெ.ரோஷன் காந்த், எம்.சக்திவேல் மகளிர் அணி திருமதி பிரியா, சாய்விர சாமி, கே.தயாநிதி, எம்.பி. எழிலரசு, வி.கலைவாணன், வி.திரு முருகன், என்.தினேஷ், எம். இமயவர்மன், கே.மேகநாதன் ஜேம்ஸ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.